3rd November 1966]

Export Association

* 354 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Export Association is being formed in the State with the active support of the Government for the purpose of boosting export of electrical and other allied materials abroad; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The Madras Electrical Export Association has been registered as a non-profit organisation on 1st January 1966, with the active support from the Government of Madras. The Organisation has a strength of 22 members with a subscription of Rs. 5,000 for subscribing members and Rs. 1,000 for associated members.

As the first step towards the study of export possibilities of electrical items, a team of three members was deputed to tour Middle East and East African countries.

திரு. வை. சங்கரன்: இதுபோன்ற 'எலெக்டிரிகல் எக்குவிப் மெண்டு அண்டு அதர் மெடீரியல்ஸ்' உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு மூலப் பொருளோ அல்லது மற்ற எந்தவிதமான வசதிகளெல்லாம் அளிக்கப்படும்? அதோடு ஏற்றுமதிக்கு அவர்களுக்கு என்னென்ன விதமான சலுகைகளெல்லாம் சர்க்கார் அளிக்க உத்தேசித்துள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்காரில் 'எக்ஸ்போர்ட் இன்ஸெண்டிவ்ஸ்' என்ன இருக்கின்றன என்று அறிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால் தெரியும்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்கு வழி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் இப்பொழுது வழிவகை சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நிலையில் போதுமான கம்பங்கள் இல்லை, போதுமான ஸ்டே ராட் இல்லை. இந்தக் குறை பெரும்பகுதியில் இருந்து வருகிறது. இதன் காரணமாக பல இடங்களில் வேலை செய்ய முடியவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன வழி செய்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவைகளை உள் நாட்டில் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களெல்லாம் இருக்கின்றன.

காமராச சாகர்

* 355 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) காமராச சாகர் திட்ட அணையின் நீளம் என்ன?

(இ) அத்திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 790 அடி.

(இ) இத்திட்டத்திற்காக 31-3-1966 வரை 129 லட்சம் ரூபாய் செலவாயிற்று.

'டாக்சி' கட்டணம்

* 356 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகள் விடுவதற்கான அனுமதி தர அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது அமல் நடத்தப்படும் ?

(உ) அதற்குக் கட்டணம், இப்போதுள்ள பேபி டாக்சியின் கட்டணம்போல் நிர்ணயிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) முதல் (உ) வரை : சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகளை விடும் செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்திடம் வந்துள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

* 357 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the rates of fares for baby and medium taxis in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The rates of fares for baby taxis and medium taxis have been fixed with effect from 1st October 1966 as follows :—

(i) for each kilometre—40 Paise.

(ii) Minimum charge for a distance of $1\frac{3}{4}$ kilometres—70 Paise.

(iii) Waiting charges—10 Paise for every five minutes in waiting.

திரு. வை. சங்கரன் : சார், இந்தக் கட்டண உயர்வை உத்தேசித்தாவது, பொதுமக்களுடைய நலனைக் கருதி, நான்கு பேர்கள் போகலாம் என்று அவர்களுக்கு பிரயாணத்திற்கு ஓரளவு வசதி செய்து கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கு பேபி டாக்சி என்பதில் சாதாரணமாக 'ஸ்டாண்டர்ட்' 'ஹெரால்ட்', 'ஃபியட்' போன்றவைகள்தான் இருக்கின்றன. அவற்றில் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரக் கஷ்டமாக இருக்கும். 'அம்பாஸிடார்'-ல் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரலாம் என்றிருக்கிறது.